


# சன்னிதானம்

GOVERNMENT OF KERALA
INFORMATION PUBLIC RELATIONS DEPARTMENT
DEVASWAM DEPARTMENT

e Bulletin


## சபரிமலை மண்டல மகர விளக்கு புனித பயண காலத்தில் அறிந்து கொள்ள வேண்டிய விவரங்கள்



https://sabarimalaonline.org/#/darshanAvailability

https://sabarimalaonline.org/#/login

இவ் வருடத்தின் (2022-2023) சபரிமலை மண்டல மகரவிளக்கு புனிதப் பயணம் நவம்பர் 16ம் தேதி மாலையில் தொடங்குகிறது. கார்த்திகை மாத பிறப்பின் முந்தைய நாளான நவம்பர் 16 மாலை 5 மணிக்கு நடை திறக்கப்படும். நவம்பர் 17ம் தேதி முதல் டிசம்பர் 27ம் தேதி வரை மண்டல திருவிழா காலமாகும். மண்டல பூஜை டிசம்பர் 27ம் தேதி நடைபெறும். டிசம்பர் 27ம் தேதி இரவு நடை சாத்தப்படும்.

மகர விளக்கு திருவிழாவுக்காக டிசம்பர் 30ம் தேதி மாலை நடை திறக்கப்படும். 2023ம் ஆண்டு ஜனவரி 20ம் தேதி வரை மகர விளக்கு காலமாகும். ஜனவரி 14ம் தேதி பிரசித்தி பெற்ற மகர விளக்கு தரிசனம் நடைபெறுகிறது. மகர விளக்கு திருவிழாவுக்கு பின்னர் ஜனவரி 20ம் தேதி காலையில் சபரிமலை கோவில் நடை சாத்தப்படும்.

மெய்நிகர் வரிசை:
சபரிமலை தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்காக திருவிதாங்கூர் தேவசம்போர்டு ஆன்லைன் தரிசன முன்பதிவு வசதியை ஏற்படுத்தி உள்ளது.

சபரிமலை புனிதப் பயணத்திற்கு வரும் பக்தர்கள் மெய்நிகர் வரிசையில் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

# சபரிமலை மண்டல மகர விளக்கு புனிதப் பயணம்

# கேரளாவில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 12 மையங்களில் ஐயப்ப பக்தர்களுக்காக உடனடி முன்பதிவு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது




## உடனடி முன்பதிவு

### உடனடி முன்பதிவு
திருவனந்தபுரம் ஸ்ரீகண்டேஸ்வரம் சிவன் கோவில்

### கொல்லம்
மகா கணபதி கோவில் -கொட்டாரக்கரை

### பத்தனம்திட்டா
நிலக்கல் தர்மசாஸ்தா கோவில், பந்தளம் பம்பை-வலியானவட்டம்

### ஆலப்புழா
ரயில் நிலையம், செங்கனூர்

### கோட்டயம்
எருமேலி கோவில் ஏற்றுமானூர் மகாதேவர் கோவில் வைக்கம் மகாதேவர் கோவில்

### எர்ணாகுளம்
பெரும்பாவூர்
கீழ்லலம்

### இடுக்கி
குமுளி

## பூஜை கட்டண விவரங்கள்

| | |
|---|---|
| நெய்யபிஷேகம் | - 1 தேங்காய் (முத்திரை |
| ஒன்றுக்கு) | - ரூ. 10 |
| அஷ்டாபிஷேகம் | - ரூ. 6,000 |
| கணபதி ஹோமம் | - ரூ. 375 |
| உஷ பூஜை | - ரூ. 1,500 |
| நித்ய பூஜை | - ரூ. 4,000 |
| பகவதி சேவை | - ரூ. 2,500 |
| களபாபிஷேகம் | - ரூ. 38,400 |
| படி பூஜை | - ரூ. 1,37,900 |
| துலாபாரம் | - ரூ. 625 |
| புஷ்பாபிஷேகம் | - ரூ. 12,500 |
| அப்பம் (1 பாக்கெட்) | - ரூ. 45 |
| அரவணை (1டின்) | - ரூ. 100 |
| விபூதி பிரசாதம் | - ரூ. 30 |
| வெள்ளை நிவேத்தியம் | - ரூ. 25 |
| சர்க்கரை பாயசம் | - ரூ. 25 |
| பஞ்சாமிர்தம் | - ரூ. 125 |
| அபிஷேக நெய் (100 மிலி) | - ரூ. 100 |
| நவக்கிரக பூஜை | - ரூ. 450 |
| ஒற்றைகிரக பூஜை | - ரூ. 100 |
| மாலை/வடி பூஜை | - ரூ. 25 |
| நெல்பறை | - ரூ. 200 |
| மஞ்சள் பறை | - ரூ. 400 |
| தங்க அங்கி சார்த்தி பூஜை | - ரூ. 15,000 |
| நீராஞ்சனம் | - ரூ. 125 |
| இருமுடிக் கட்டு நிறைத்தல் (பம்பை) | - ரூ. 300 |





# சபரிமலை பூஜை நேரம்

| | |
|---|---|
| காலை | |
| *3* மணி | நடை திறப்பு, |
| | நிர்மால்யம், அபிஷேகம் |
| *3.30* | கணபதி ஹோமம் |
| *3.30* முதல் *11.30* வரை | நெய்யபிஷேகம் |
| *7.30* | உஷ பூஜை |
| *11* முதல் *11.30* வரை | அஷ்டாபிஷேகம் |
| *12.30* | உச்சிகால பூஜை |
| *1.00* | திருநடை அடைப்பு |
| | மாலை |
| *3.00* | திருநடை திறப்பு |
| *6.30* | தீபாராதனை |
| *7* முதல் *9.30* | வரை |
| | புஷ்பாபிஷேகம் |
| *9.30* | முதல் |
| | இரவு பூஜை |
| *11.00* | ஹரிவராசனம் |
| | பாடி நடை அடைப்பு |





## பிளாஸ்டிக் இல்லாத சபரிமலை

சபரிமலையில் பிளாஸ்டிக் பயன்பாடு முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. பக்தர்கள் தங்களது இருமுடிக்கட்டில் பிளாஸ்டிக் பொருட்களை (பாட்டில், கவர் போன்றவை) தவிர்க்க வேண்டும்.

## பம்பையை அசுத்தமாக்க கூடாது

பம்பை நதியில் உடைகள் உள்பட பொருட்களை வீச வேண்டாம். புண்ணிய நதியான பம்பையை அசுத்தமாக்காமல் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு பக்தரின் பொறுப்பாகும்.

## குப்பைகளை வீசாதீர்கள்

குப்பைகளை குப்பைத் தொட்டிகளில் மட்டுமல்லாமல் வேறு எந்த இடத்திலும் வீசுவதை தவிர்க்க வேண்டும்.

## பொது இடங்களில் மலஜலம் கழிக்க வேண்டாம்

பக்தர்கள் பொது இடங்களில் மலஜலம் கழிக்கக் கூடாது. மலஜலம் கழிப்பதற்கு கழிப்பறைகளை பயன்படுத்த வேண்டும். பம்பை, சன்னிதானம் மற்றும் மலை ஏறும் வழிகளை தூய்மையாக பாதுகாக்க வேண்டும்.

## மது, போதைப் பொருள் இல்லாத புனித பயணம்

பக்தர்கள் மது உள்பட போதைப் பொருட்களை பயன்படுத்தக் கூடாது. பம்பை, சன்னிதானம், வனப்பாதை உள்பட இடங்களில் புகைபிடிக்கக் கூடாது. ஆயுதங்கள், பட்டாசுகள் உள்பட வெடிபொருட்களை கைவசம் வைத்திருப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

## தீ பற்ற வைக்கும் போது கவனம் தேவை

ஸ்டவ் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றை சன்னிதானத்தில் பயன்படுத்த அனுமதி இல்லை. தீ பற்ற வைத்தால் தேவை முடிந்தவுடன் அதை அணைக்க வேண்டியது அவசியமாகும்.

## காவல்துறையை அழைக்கலாம்

பாதுகாப்பு பரிசோதனைகள் உள்ள இடங்களில் பக்தர்கள் தாங்கள் சுயமாக பரிசோதனைகளுக்கு உட்பட வேண்டும். பக்தர்கள் தங்களுக்கு தேவையான உதவிகளுக்கு காவல்துறையை தொடர்பு கொள்ளலாம். சந்தேகத்திற்கிடமான வகையில் ஏதாவது தென்பட்டால் உடனடியாக காவல்துறையிடம் விவரம் தெரிவிக்க வேண்டும். யாராவது வழி தவறி சென்றால் காவல் புறக்காவல் நிலையத்தின் உதவியை நாட வேண்டும். வயதானவர்கள், குழந்தைகள் மற்றும் சிறுமிகள் தங்களது கழுத்தில் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுடன் கூடிய அடையாள அட்டையை அணிய வேண்டியது அவசியமாகும்.

## நடமாடும் மருத்துவ மையங்கள்

ஆக்சிஜன் பார்லர்கள் மற்றும் மருத்துவ மையங்களின் சேவையை பக்தர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பம்பையிலும், நிலக்கல் பகுதியிலும் அவசர சிகிச்சை வசதிகளுடன் கூடிய நடமாடும் மருத்துவ மையங்கள் பக்தர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## உதவிகளுக்கான தொலைபேசி எண்கள்

| | |
|---|---|
| அவசர செயலாக்க மையம் | 04735 202166 |
| பம்பை | 04735 203255 |
| நிலக்கல் | 04735 205002 |
| பத்தனம்திட்டா மாவட்ட பேரிடர் நிவாரண அமைப்பு | 0468 2322515 |
| பம்பை காவல் நிலையம் | 04735 203412 |
| நிலக்கல் காவல் நிலையம் | 04735 205207 |
| சன்னிதானம் காவல் நிலையம் | 04735 202014 |
| பத்தனம்திட்டா மகளிர் காவல் நிலையம் | 0468 2272100 |
| பத்தனம்திட்டா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் | 0468 2222636 |
| அவசர மருத்துவ மைய கட்டுப்பாட்டு அறை | 04735 203232 |
| நிலக்கல் அரசு மருத்துவமனை | 04735 205202 |
| பத்தனம்திட்டா மாவட்ட மருத்துவமனை சபரிமலை வார்டு | 9188746248 |
| சன்னிதானம் அரசு மருத்துவமனை | 04735 202101 |
| சாலை பாதுகாப்பு மண்டல திட்டம் | 9400044991, 9562318181, 0468 2222426 (அலுவலகம்) |
| சன்னிதானம் தீயணைப்பு நிலையம் | 04735 202033 |
| சன்னிதானம் வனத்துறை | 04735 202074 |







# பக்தர்களுக்கான அறிவுரைகள்

தரிசனத்திற்கு வரும் ஐயப்ப பக்தர்கள் ஆச்சார விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்

பக்தர்கள் மெதுவாக மலை ஏற வேண்டும்

சன்னிதானம் செல்வதற்கு பாரம்பரிய பாதையான மரக்கூட்டம், சரங்குத்தி மற்றும் நடைப்பந்தலை பயன்படுத்த வேண்டும்

பதினெட்டாம்படியில் ஏறுவதற்கு  வரிசையில் செல்ல வேண்டும்

வரிசையை தாண்டி செல்வதோ, வரிசையில் நிற்கும்போது நெரிசலை ஏற்படுத்தவோ கூடாது

பதினெட்டாம் படியில் தேங்காய் உடைக்கவோ, முட்டு குத்தி ஏறவோ முயற்சிக்கக் கூடாது

ஐயப்பனுக்கு கொடுக்கும் காணிக்கையை வீசி எறியாமல் உண்டியலில் மட்டும் போடவும்

தரிசனம் முடிந்து திரும்பிச் செல்லும் பக்தர்கள் நடைப்பந்தல் மேம்பாலத்தை பயன்படுத்த வேண்டும்

பக்தர்கள் ஓய்வெடுக்கும் இடங்களான நடைப்பந்தலையும், கீழ் பகுதியில் உள்ள திருமுற்றத்தையும் நடைபாதையாக பயன்படுத்தக் கூடாது

பம்பையில் இருந்து சன்னிதானத்திற்கு புறப்படுவதற்கு முன் கூட்டம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்

சன்னிதானத்தில் உள்ள திருமுற்றத்தில் ஓய்வெடுக்க வேண்டாம்

டோலியில் செல்ல விரும்புபவர்கள் பம்பையிலுள்ள தேவசம்போர்டு நிர்வாக அதிகாரி அலுவலகத்தின் சேவையை பயன்படுத்திக் கொள்ளவும்

இதற்கு கூடுதல் பணம் கொடுக்க வேண்டாம்

கோவில் வளாகத்தில் செல்போன் பயன்படுத்தக் கூடாது

அனுமதிக்கப்படாத வியாபாரிகளை ஊக்குவிக்க வேண்டாம்

லைசென்ஸ் உள்ள தடைகளிலிருந்து மட்டுமே பொருட்களை வாங்க வேண்டும்
அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே வாகனங்களை நிறுத்த வேண்டும்

DEVASWAM DEPARTMENT
TRAVANCORE DEVASWAM BOARD

MISSION
GREEN SABARIMALA

# சபரிமலையை பிளாஸ்டிக்கில் இருந்து பாதுகாக்க நாம் கை கொடுப்போம்



## பிளாஸ்டிக் இல்லாத சபரிமலை....

- சபரிமலை ஐயப்பன் குடி கொண்டுள்ள பூங்காவனம் ஒரு புண்ணியமான இடமாகும். இங்கு பிளாஸ்டிக் பொருட்களை கொண்டு வர வேண்டாம்.....
- இருமுடி கட்டில் பிளாஸ்டிக் பொருட்களை முழுவதுமாக தவிர்க்க வேண்டும்.....
- ஆச்சார விதிமுறைகளின் படி பயன்படுத்தும் பொருட்களை மட்டுமே இருமுடிக் கட்டில் நிரப்ப வேண்டும்......
- குடிநீர் கொண்டு வருவதற்காக பிளாஸ்டிக் பாட்டிலுக்கு பதிலாக வேறு பொருட்களைப் பயன்படுத்தலாம்.....
- பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக துணிப் பைகளையோ அல்லது பேப்பர் பைகளையோ பயன்படுத்துங்கள்.....
- புண்ணிய நதியான பம்பை ஆற்றில் துணிகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை வீசக்கூடாது....
- சபரிமலை பிளாஸ்டிக்கில் இருந்து விடுதலை ஆகட்டும்....